# விண்வெளியில் மேலும் மூன்று ரஷ்ய வீரர்

Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 338

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 3 ஷவ்வால் 26 வியாழக்கிழமை [16-1-69]

மாஸ்கோ, ஜன. 15

சோவியத் யூனியன் இன்று மூன்று வீரர்களுடன் கூடிய விண்வெளிக்கலமொன்றை விண்வெளிக்கு அனுப்பியது. 'சோயஸ் 5' என்று பெயரிட்டுள்ள இந்தக் கலம் எற்கனவே வானவீதியில் சோயஸ் 4 இல் பூமியை வலம் வந்துகொண்டிருக்கும் ரஷ்ய விண்வெளி வீரர் கேணல் ஷாட்டலோவுடன் தொடர்புகொண்டு சோதனையை நடத்தத் தொடங்கியுள்ளது.

நேற்று அனுப்பப்பட்ட சோயஸ்-4 என்ற விண்ளிக் கலமும் இன்று அனுப்பப்பட்ட சோயஸ்-5 என்ற விண்வெளிக் கலமும் திட்டமிட்டபடி சரியாக இயங்கிக் கொண்டிருப்பதாக விண்வெளி அவதான நிலையம் தெரிவித்தது.

ஒரு விண்வெளிக் கலத்திலிருந்து மற்றைய கலத்திற்கு விண்வெளி வீரர் ஒருவர் மாற்றப்படக்கூடும் என்றும், இவ்விதம் விண்வெளியில் இவர்கள் மாறியிருந்தால் விண்வெளி பிரயாணத்தில் புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதப்படும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## டட்லி

ரோமாபுரி, ஜன. 15

காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தற்போது ரோமாபுரியில் தங்கியிருக்கிருர்.

# புது வரவுசெலவுத்திட்டத்தில் நூல்நிலயங்களுக்குமான்யம்

## யாழ். மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"இப்போது சனசமூகநிலையங்களுக்கு மட்டும் யாழ்ப்பாண மாநகரசபையினுல் மான்யம் வழங்கப்பட்டு வருகின்றது. நிதிநிலைமை சரியில்லாததினுல் இப்போது நூல்நிலயங்களுக்கு மான்யம் வழங்க முடியவில்லை. ஆனுல் மாநகரசபையின் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் நூல்நிலயங்களுக்கு மான்யம் வழங்க ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதென நான்முடிவு செய்துள்ளேன்."

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. நாகராஜா இவ்வாறு கடந்த இரவு தெரிவித்தார்.

பொங்கலன்றுஇரவு முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற நல்லூர் சங்கிலியன் மன்ற புதுக்கட்டிடத் திறப்புவிழாவில் மாநகரசபை முதல்வர் திரு. நாகராஜா மேலும் பேசியதாவது:

மக்களின் அன்ருட தேவையை உணர்ந்து அவைகளை நிறைவேற்றுவதுதான் உள்ளூராட்சிமன்றங்களின் கடமையாகும். இதில் மாநகரசபை கூடிய பங்கு வகிக்கின்றது. ஒவ்வொரு வட்டாரம் தோறும் ஒவ்வொரு நூல் நிலையம் அமைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். யாழ்ப்பாண மாநகரசபையிடம் போதிய நிதி இல்லாததால் இதனை எங்களால் செய்ய முடியவில்லை. ஆயினும் ஆசியாக் கண்டத்திலேயே மிகச்சிறந்த ஒரு நூல்நிலையமாகக் கட்டப்பட்டு வரும் யாழ்ப்பாண பொதுஜன நூல்நிலையம் யாழ்ப்பாண மாநகரசபைக்கு ஒரு நற்பெயரைக் கொடுத்து வருகின்றது.

கா. நி.

## ஒட்டிப்பிறந்த குழந்தைகள் நேற்று இறந்தன

கொழும்பு, வியாழன்

கம்பஹா ஆஸ்பத்திரியில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் இரண்டும் நேற்று மாலை உயிர் துறந்தன. 22 வயதுடைய ரி. டி. குணவதி என்பவருக்கு நேற்று முன்தினம் கம்பஹா ஆஸ்பத்திரியில் பிறந்த இவ்விரு குழந்தைகளையும் சத்திர சிகிச்சை மூலம் நேற்று முன்தினம் பிரிக்கப்பட்ட போது இவர்கள் உயிருடனேயே இருந்தனர்.

தலா 4 றுத்தல் நிறையுடையதாகவிருந்த இக் குழந்தைகளின் உடல்நிலை சத்திரசிகிச்சையின் பின் தேறி வந்துகொண்டிருந்த போது சத்திரசிகிச்சை பயனளித்துவிட்டதாகக் கருதப்பட்டது. இலங்கையில் இத்தகைய சத்திரசிகிச்சை ஒன்று முன்னர் நடைபெற்றதாயினும் அதுவும் இறுதியில் வெற்றியளிக்கவில்லை.

வல்வெட்டித்துறை தாக்குதல் வழக்கு

## சூரியசேகரன் ராணுவவீரரை அடையாளம் கண்டார்

யாழ்ப்பாணம், வியாழன்

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு முன்னுல் இம்மாதம் 6ந் திகதி நடைபெற்ற இராணுவத் தாக்குதல்கள் சம்பந்தமாக, நேற்று நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் தாக்குதல்களுக்குள்ளான சகோதரர்களில் ஒருவரான திரு. சூரியசேகரன், வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் டீசூசா என்பவரை அடையாளம் காட்டினுர். தாக்குதல்களுக்குள்ளான மற்றச் சகோதரரான திரு. சக்திவேல் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதால் அவர் வரவில்லை.

பருத்தித்துறை பதில் மாஜிஸ்திரேட் திரு. கே. இரத்தினசிங்கம் முன்னிலையில் அணிவகுப்பு நடைபெற்றது.

இநத அணிவகுப்பு நடைபெற்றபோது வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜெயசிங்கா, வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த திரு. வீரதுங்கா ஆகியோரும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப் பிரிவு உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. என். டி. சில்வா

(8-ம் பக்கம் பார்க்க)

## "தைபிறந்ததும் தமிழருக்கு நல்லகாலம்"

--சிவசிதம்பரம்

புதுக் கட்டிடத்தைத் திறந்து வைத்த உடுப்பிட்டி எம். பி.யும், உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் பேசியதாவது:

இப்போது தமிழருக்கு ஒரு நல்ல காலம் பிறந்து விட்டது. தைபிறக்கும் போதே தமிழரின் இருபெரும் தமிழ்க்கட்சிகளும் தமிழன் தலைநகரான யாழ்ப்பாணத்தில் நல்லதொரு நிர்வாகத்தை ஏற்படுத்த ஒன்றுசேர்ந்துஒருநகரமுதல்வரைத் தெரிந்து நியமித்துள்ளார்கள். நேர்மையின் கடமை வீரரான ஒரு நகரபிதா யாழ்ப்பாணத்துக்கு இப்போது கிடைத்துள்ளார். ஏற்றி இறக்குவதை விட்டு நல்ல நிர்வாகத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்க சகல மக்களையும் ஒன்றுபட்டு வருமாறு இப்புது வருடப்பிறப்பில் நான் உங்கள் ஒவ்வொருவரையும் கேட்கின்றேன்.

நமது நாடு முன்னேற வேண்டுமானுல் மற்ற நாடு

(8-ம் பக்கம் பார்க்க)

## தங்கத்தால் வேலி

பம்பலப்பிட்டி, புதன்

அனுராதபுரத்தில் உள்ள வெள்ளரச மரத்தைச் சுற்றி அடைக்கப்பட்டுள்ள இரும்பு வேலிக்குப் பதிலாகத் தங்கவேலி அமைக்கப்படவிருக்கிறது. 2,500 ஆண்டுகளுக்கு முன்னராக புத்த பெருமான் ஞான ஒளி பெற்ற மரமென்று கூறப்படும் இந்த அரசமரத்தைச் சுற்றி 10 லட்சம் ரூபா செலவில் தங்க வேலி அமைக்கப்படும்.

உலகம் பூராவுமுள்ள பௌத்தர்கள் இதற்கான செலவைக் கொடுக்க முன் வந்துள்ளனர்.

## சர்வோதய பாத்திர இயக்கம் நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்படும்

### காந்தி சேவாசங்கம் ஏற்பாடு

பம்பலப்பிட்டி, புதன்

இலங்கை முழுவதிலும் சர்வோதய பாத்திர இயக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு அகில இலங்கை காந்திய சேவா சங்கம் முடிவு செய்திருக்கின்றது.

அண்மையில் இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் இந்த இயக்கம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்திய சர்வோதய தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத் தற்காலிகத் தலைவரும் ராஜாங்க மந்திரியுமான திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன தலைமைவகித்தார்.

இக்கூட்டத்தில்சர்வோதய பாத்திர இயக்கத்தை அகில இலங்கை காந்திய சேவா சங்கம் ஆரம்பித்தது. ஸ்ரீமதி பிரபாவதிதேவி ஜெயப்பிரகாஷ் நாராயண் சர்வோதய பாத்திரத்தை விநியோகித்தார். இலங்கை காந்தி நூற்ருண்டு விழா தேசிய சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னுயகா முதலில் பாத்திரத்தை ஸ்ரீமதி நாராயணிடம் பெற்ருர். பின்

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமண அழைப்பு

வேலணை கிழக்கு திரு. சிவசிதம்பரம் கோபாலபிள்ளை (உதவி நிலஅளவை அதிகாரி) அவர்களுக்கும் செல்வஸ்தான் கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி சுப்பிரமணியம் செல்வநாயகி அவர்களுக்கும் 20-1-69 அன்று மாலை 5-6 மணியளவில் நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் நடைபெறும். அத்தருணம் சமுகம் தருமாறு உறவினர்களும் சினேகிதர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. 1151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்


### மரண அறிவித்தல்

**செல்லத்துரை சுப்பிரமணியம்**

ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜனும் நீலாயதாக்ஷியின் அன்புக் கணவரும் ஜெயராஜசிங்கம், துரைராஜசிங்கம், புவிராஜசிங்கம், தனராஜசிங்கம், குலராஜசிங்கம், கனகராஜசிங்கம், அருள்ராஜசிங்கம், பாலேந்திர ராஜசிங்கம், ராஜராஜேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும் திருமதி இராசேஸ்வரி ஜெயராசசிங்கம், திருமதி கமலாதேவி துரைராசசிங்கம் ஆகியோரின் அருமை மாமனும், காலஞ்சென்ற பிரபல நகை வியாபாரத் தரகர் கனகரத்தினத்தின் பாரியார் பரிபூரணத்தின் மருமகனுமான இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன். செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்கள் 15-1-69 அதிகாலை காலமானார். அன்னாரின் பூதவுடல் கச்சேரி நல்லூர் வீதி, குரசெட் ஒழுங்கை 5-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர், ஏனையோர் இதை அறிவித்தலாக ஏற்குமாறு வேண்டுகின்றனர்.

திருமதி சுப்பிரமணியம்.

1150

**திருக்கோணமலை நகரசபை**

1969-ம் வருடத்துக்கான வரிமதிப்பீட்டுப்புத்தகங்கள்

166-ம் பிரிவு நகரசபை விதிமுறைப்படி (அத்தியாயம் 255) மாநகரசபை விதி 235 (1) (அத்தியாயம் 252) ஏற்ப 1969-ம் வருடத்துக்கான திருக்கோணமலை நகரசபை மதிப்பீட்டுப் பதிவேடுகள் இப்போது பரிசோதனைக்குத் தயாராகவிருக்கின்றன. காரியாலயநேரங்களில் சபைக் காரியாலயத்தில் இவை பரிசோதனை செய்யப்படலாம்.

எஸ். சிவானந்தன்
தலைவர்
நகரசபை, திருக்கோணமலை.
1149

**ஸெயின்ஸ்தான்** (கொழும்பு) காலை 10, பி. ப. 2, மாலை 6, இரவு 9-30
**முருகன்** (ஹிந்துப்பிட்டி)
**ஓடியன்** (கல்கிசை) 10, 2, 6, 9-30
**ராஜா** (யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-30, 9-45
**கசினோ** (மாத்தளை) 2-15, 6, 9-30

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
சௌகார் ஜானகி, சோ, அசோகன், மனோகர்
மற்றும் பலர் நடித்த
**எம். ஜி. ஆரின் 100-வது படம்**
ஜெமினியின்
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்) (எஸ்.ரி.ஆர். வெளியீடு)

**கிங்ஸ்லி** **பிளாஸா** **மைலன்**
**ராஜ்** (நீர்கொழும்பு) **விஜயா** (மட்டுநகர்)

மக்கள்திலகம் நடிகையர்திலகம்
**எம்.ஜி.ஆர் ★ சாவித்திரி**
எம். ஆர். ராதா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
கௌரி பிக்சர்ஸ்
**பரிசு**
டைரக்ஷன் யோகானந் — இசை கே. வி. மகாதேவன்

வெற்றிகரமான 2-வது வாரம்
**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 1-30, 6-00 9-30 மணி
ராஜ்கபூர், வைஜயந்திமாலா
ராஜேந்திரகுமார்
நடித்த
**சங்கம்**
(ரெக்னிக் கலர்)


### அனலை தீவு நாவலர் ச. ச. நிலையம்

அனலைதீவு, புதன்

புதிதாகஅங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட அனலைதீவு நாவலர் சனசமூக நிலையம் பொங்கலன்று திறந்துவைக்கப்பட்டது. அனலைதீவு காளிகோவிலடியில் அமைந்த நாவலர் சனசமூக நிலையத்தில் நாவலர் திருவுருவப்படத்தை அனலைதீவு கிராமச்சபைத் தலைவர்திரு. சு. நாகலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு, பெ. துரைரசா, திரு. வே. பொன்னுத்துரை, தலைவர்: திரு. செ. சிவநேசன், உபதலைவர்: திரு. வே. ஐயாத்துரை காரியதரிசி: திருபெ. இராசரத்தினம், உபகாரியதரிசி திரு பூ. தெய்வேந்திரன், தனாதிகாரி: திரு வே. குகதாசன், உபதனாதிகாரி திரு, க. அருணாசலம் 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.


**MANOHARA**
JAFFNA
10-30 a. m. 4-45, 7-00, & 9-45 p. m.
NATALIE WOOD
in
**This Property is Condemned**
(Technicolor)

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர். - விஜயா
நடித்த
**விவசாயி**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நடித்த
**ரகசியப் பொலிஸ் 115**

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6 30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ரவிச்சந்திரன், காஞ்சனா
முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நடித்த
**காதலிக்க நேரமில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)


## வரி விளம்பரம்


### தேவை

பைக்கற் போடக்கூடிய பெண்கள் தேவை. அலன்டி கோ, 23 1, செட்டித்தெரு, நல்லூர். 481

### விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள்:
நல்ல நிலைமையிலுள்ள ROYAL ENFIELD (1 ஸ்ரீ) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. நல்லையா (சின்னக்கிளி), முனியப்பர் கோவிலடி, K. K. S. ரோட், கோண்டாவில். 483

காணி:
கொக்குவில் ஸ்டேசனுக்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் மத்தியிலுள்ள வட்டுறுப்பான காணி எட்டுப் பரப்பு இரு கூறுகப் பிரித்து விற்கப்படும். விபரங்களுக்கு தரகரின்றி நேரில் 21, செம்மணி வீதி, நல்லூரில் தொடர்புகொள்ளவும். செ. இரத்தின சபாபதி. 484

காணி
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு எதிர்ப்பக்கத்திலும், காங்கேசன்துறை யாழ்ப்பாண பிரதான வீதிக்கு அருகாமையிலும், காங்கேசன்துறை பட்டின எல்லைக்குள் இருக்கும் நிலங்கள் 8 பரப்பு, 15 பரப்பு என இரு துண்டுகளாக விற்பனைக்கு இருக்கின்றன. இக் காணிகளை வாங்கவிரும்புவோர் சுன்னாகம் மின்சார நிலையத்தில் திரு. கே. மயில்வாகனத்திடம் தொடர்பு கொள்ளலாம். 488

யாழ்ப்பாணம் பெரிய கடை மார்க்கட்டுக்கு மிகவும் அண்மையில் பிடவைக் கடை பேன்ஸிக்கூட்ஸ் மற்றும் பலவித வியாபாரத்துக்கும் தோதானதும் சகல வசதிகளுமுள்ள கடைக்கட்டிடம் காலியான நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இலக்கம் 490, ஈழநாடு, யாழ்ப்பாணம். 490

### வாடகைக்கு

வாடகைக்கு 17-ம் நம்பர் மாட்டீன் ஒழுங்கை ஸ்ரேசன் சந்திக்கப்பால் தொடர்பு கொள்ளவும். எஸ். ஏ. செல்வரத்தினம். 506


### நன்றி நவிலல்

புங்குடுதீவு மேற்கு இளைப்பாறியஆசிரியர் நாராணர் தில்லையம்பலம் (குமரேசு) அவர்கள் 6-1-69-ல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகளில் பங்குபற்றிய உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பி, எங்கள் துக்கத்தில் பங்கு கொண்ட ஏனையோருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். தங்கள் அன்பை மறவாத மக்கள், மருமக்கள் புங்குடுதீவு.5. 493


### கல்வி

தகைமைபெற்ற ஒருவரால் பெண்களுக்காய கீழ்க்காணும் கலைகள் தமிழ், ஆங்கில மூலம் யாழ். நகரில் வெகுவிரைவில் ஆரம்பமாக உள்ளது. (1) வீட்டு நிர்வாகம், (2) உணவியலும் சமையற்கலையும், (3) நவீனஉடை தயாரிப்பு முறைகள், (4) தையல்-பூவேலை- பொம்மை தயாரித்தல்-சாயம் தீட்டல், (5) யப்பானிய முறை பூ அலங்காரம், (6) ஆங்கிலப் பயிற்சி. மேலதிக விபரங்கட்கும் பிரவேசப் பத்திரத்திற்கும் முத்திரை ஒட்டப்பட்டு சொந்த விலாசம் இடப்பட்டநீளத்தபால் உறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விளம்பர இல. 491 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 491

1969 பங்குனி, மார்கழி க. பொ. த. பரீட்சைகளுக்காக பட்டதாரி ஆசிரியர்களால் உயிரியல், பௌதிகம், இரசாயனம், தூயகணிதம், பிரயோக கணித பாடங்களுக்குக் காலை மாலை வகுப்புக்கள் நடக்கின்றன. வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை 473

1924-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தகக் கல்லூரியில் கலை, விஞ்ஞான, வர்த்தக பாடங்கள், 1969 பங்குனி பரீட்சைக்குரிய விசேட வகுப்புகளும் மார்கழி க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைக்குரிய வகுப்புக்கள் நடக்கின்றன. இரு பாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 474


### இலங்கை திரும்பினார்

உடுவில், புதன்

புறாணி பல்கலைக் கழகத்தின விரிவுரையாளராக கடமையாற்றிய பொருளாதார பட்டதாரியான திரு. என். சிவநேசன் இலங்கை திரும்பியுள்ளார். மானிப்பாயைச் சேர்ந்த திரு. என். சிவநேசன் கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ் கங்கிரஸ் அபேட்சகராக உடுவில் தொகுதியில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஏழைப்பிள்ளைகள் ஏமாற்றம்

உடுவில், புதன்

பாடசாலைகள் ஆரம்பமாகி இருவாரங்களாகியும் சிலபாடசாலைகளில் பணிசுக்குப்பதிலாக பிஸ்கட்டுகள் இதுவரைவழங்கப்படாமையால் பல ஏழைப்பிள்ளைகள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனராம்.

### பிரிவுபசாரம்

சுழிபுரம், புதன்

சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பண்ணிசை வகுப்புகளை நடத்தி வேறு இடத்துக்கு செல்லும் ஓதுவார் திருவாசகமணி பி. இராசசேகரனுக்கு ஓர் பிரிவுபசாரம் வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.


டிசம்பர் இதழ் விற்பனையாகின்றது!
இதுவரையும் வெளிவராத பிரமாண்டமான வர்ணசினிமா மாதஇதழ்
**திரைவாணி**
யாழ்ப்பாண விற்பனையாளர்:
அன்பு புத்தகசாலை 27D, பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அணுசக்தி சண்டைக் கப்பலில் வெடிவிபத்து

## 25 பேர் ஸ்தலத்தில் பலி; நூற்றுக்கணக்கானோர் காயம்

### ஏராளமானவர்களைக் காணவில்லையாம்

நியூயோர்க், ஜன. 15

**அணுசக்தியால் இயங்கும் உலகின் மிகப் பெரிய விமானந்தாங்கி சண்டைக் கப்பலான என்டர் 'பிரைஸ்' என்ற அமெரிக்க கப்பலில் நேற்றுத் திடீரென தீப்பற்றியதாலும், குண்டுகள் வெடித்ததாலும் 25 பேர் பலியாகியுள்ளனர்; 100 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்; ஏராளமானவர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

வியட்னாமுக்கு திரும்புவதற்கு முன்னர் பசிபிக் சமுத்திரத்தில் 'என்டர் பிரைஸ்' ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ஹொனலுலுவுக்கு சுமார் 120 கிலோமீட்டர் தொலைவில் பசிவிக் சமுத்திரத்தில் கப்பல் இருந்தது. கப்பலில் அப்பொழுது 4600 பேர் இருந்தனர்.

திடீரென தீப்பற்றியதாலும் குண்டுகள் வெடித்ததாலும் கப்பலில் இருந்தவர்கள் வெளியே தூக்கி எறியப்பட்டனர். இப்படி எறியப்பட்டவர்களில் ஏராளமானவர்களைக் காணவில்லை. 25 பேர் உடன் மரணமானதாக அறிவிக்கப்பட்டது. 100க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். கடற்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் உடனே உதவிக்கு விரைந்து சென்றன. காயமடைந்தவர்கள் ஹொனலுலுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்குள்ள மக்கள் ரத்த தானம் செய்வதற்கு ஆயத்தமாய் இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். கப்பலுக்கும் டாக்டர்கள் விரைந்துசென்றனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஹொனலுலுவில் டாக்டர்கள் ஆயத்தமாகவிருக்கிறார்கள்.

கப்பலில் ஏற்பட்ட விபத்துக்கான காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. 'என்டர்பிரைஸ்' விபத்துக்குப் பின்னர் மெதுவாக நகர்ந்து போல் துறைமுகத்துக்குப் போய்ச் சேர்ந்துள்ளது.

கப்பலில் சுமார் பத்து குண்டுகள் வெடித்து பலத்த சேதத்தை ஏற்படுத்திய போதிலும் அணு சாதனங்கள் எதுவும் பாதிக்கப்படவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

காமன்வெல்த் நாடுகளுக்கு

# பிரிட்டிஷ் உதவி மேலும் அதிகரிக்கும்

லண்டன், 15

காமன்வெல்த் பிரதமர்களின் 9 நாள் மாநாடு இன்று முடிவடைந்தது. அங்கத்துவ நாடுகளுக்கான உதவிகள், வர்த்தகம், சர்வதேசப் பொருளாதார நிலைமை போன்ற பல்வேறு அம்சங்களையும் பற்றி ஆலோசித்த பின் மாநாடு முடிவடைந்தது.

காமன் வெல்த் நாடுகளுக்கான தனது பொருளாதார உதவியைத் தொடர்ந்து அதிகரிக்கப்போவதாகப் பிரிட்டன் மாநாட்டில் உறுதியளித்தது. கடந்த ஆண்டுகளில் பிரிட்டன் பற்றுவரவு சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்தபோதிலும் அங்கத்துவ நாடுகளுக்கான உதவிகளைக் குறைக்கவில்லையென்று இந்திய பிரதிநிதி மாநாட்டில் கூறினார்.

பிரிட்டனின் வெளிநாட்டு உதவிகளில் 80-ல் இருந்து 90 சத வீதம் காமன்வெல்த் நாடுகளுக்கே கிடைப்பதாகப் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சர் கூறினார். இதில் பெரும் பகுதி வட்டியில்லாகடனாகவே கொடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலிய பிரதமர் பேசிய போது, கடன்கொடுப்பதைவிட வர்த்தக ரீதியில் வளரும் நாடுகளுக்கு உதவுவது பெரிதும் நன்மையாய் இருக்குமென்று குறிப்பிட்டார். இந்தத் துறையில் ஆஸ்திரேலியா தொடர்ந்து தன்னாலான உதவிகளைச் செய்யுமென்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, முன்னர் எப்போதையும் விட இப்பொழுது ரொடீஷிய நிலைமை பற்றி தெளிவான கருத்து ஏற்பட்டிருப்பதாகக் கருத்து வெளியிட்டார்.

மலேஸிய பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மான் பேசியபோது, காமன்வெல்த்திற்கு பலமான தலைமைப் பீடம் அமையவேண்டும் என்று வற்புறுத்தினார். காமன்வெல்த் தலைமை 28 நாடுகளுக்கிடையிலும் மாறி மாறி வரவேண்டுமென்று அவர் யோசனை தெரிவித்தார்.

## ஆபாசங்களை குறைக்க

### படமுதலாளிகளுக்கு யோசனை

சென்னை ஜன. 15

மதுரை பாண்டியன் ஹோட்டலில் நடைபெற்ற தமிழ்நாடு தியேட்டர் அதிபர்கள் சங்கத் தொடக்க விழாவைத் தொடக்கிவைத்துப் பேசிய அமைச்சர் சத்தியவாணிமுத்து காரில் இருந்துகொண்டே சினிமா பார்க்கத்தக்க முறையில் தியேட்டர்களில் அமைக்கலாமென யோசனை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் குறைபாடுகளை நீக்கவும் அரசாங்கம் உதவி செய்யுமெனவும் எழுத்து, பேச்சு ஆகியவற்றைவிட சினிமாவே மக்களின் கவனத்தை ஈர்ப்பதால் ஆபாசத்தைக் குறைத்து தமிழர் பண்பாட்டுக்கமையத் தரமான படங்களைத் தயாரிக்கப் பட அதிபர்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும், அரசாங்கத்துக்கு வருமானம் பெருகக் குறைந்த செலவில் அதிக சினிமாக் கொட்டகைகளை அமைக்க வேண்டுமெனவும், அரசாங்கத்தின் சாதனைகளைக் கிராமப்புற மக்களும் புரிந்துகொள்வதற்காகத் தமிழக அரசு செய்திப்படம் தயாரிக்கிறதெனவும் தெரிவித்தார்.

கிராம மக்களுக்கு வசதியளிக்கத் தியேட்டர் முதலாளிகள் குறைந்த செலவில் சினிமாக் கொட்டகைகள் அமைக்க முன்வர வேண்டுமெனவும் அவர்கூறினார். மேல் நாடுகளிலுள்ளது போல் காரில் இருந்து கொண்டும் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டும் சினிமாப் பார்க்கத்தக்கவாறு நகரப்புறங்களில் தியேட்டர்கள் அமைக்க யாரும் முன்வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் உதவுமெனவும் அமைச்சர் சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

வியட்னாம் அமைதிக்கு

# முன் எப்போதையும் விட மிக சாதகமான சூழ்நிலை

## ஜோன்சன் நம்பிக்கை

வாஷிங்டன், ஜனவரி 15

**வியட்னாமில் அமைதி ஏற்படுவதற்கு கடந்த 4 ஆண்டுகளில் இருந்ததைவிட நிலைமை இப்பொழுது மிகவும் சாதகமாகவிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் கூறியிருக்கிறார்.**

கடந்த 170 ஆண்டுகளில் எந்த ஒரு அமெரிக்க ஜனாதிபதியும் செய்யாத ஒரு புது சம்பிரதாயத்தை ஜனாதிபதி ஜோன்சன் ஏற்படுத்தியுள்ளார். ஜனாதிபதிகள் எவரும் தாம் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் நேரடியாக காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கு செய்தி விடுப்பதில்லை. ஜனாதிபதி ஜோன்சன்நேற்று காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் டெலிவிஷன்மூலம் தமது பிரியாவிடைசெய்தியை விடுத்து புதுசம்பிரதாயம் ஒன்றினை ஏற்படுத்தினார்.



வியட்னாமில் அமைதிக்கான பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் கடுமையான சண்டைகள் நடைபெறக்கூடும். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் இருந்ததைவிட இப்பொழுது வியட்னாமில் அமைதி காண்பதற்கான சூழ்நிலை மிகவும் சாதகமாகவிருக்கிறதுஎன்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சாத்யமான எல்லா விஷயங்களிலும் சோவியத் யூனியனுடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்று தமக்கு பிறகு பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதிக்கு திரு. ஜோன்சன் யோசனை கூறினார். அமெரிக்காவின் சமூக நலன்களுக்கான விஷயங்களுக்கு அதிக செலவிட வேண்டும் என்றும், பணவீக்கத்துக்கெதிராக தாம் அறிமுகப்படுத்திய 10 வீத மேலதிக வரியைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

## கங்கைக்கு 14 பேர் பலி!

புதுடில்லி, ஜன. 15

மேற்கு வங்காளத்தில் கங்காசாகர் மேளாவில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த யாத்திரிகர்படகொன்று கவிழ்ந்ததில் குறைந்தது 14 பேராவது மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. சுமார் 100 பேர் அந்தப் படகில் இருந்தனர்.

நேற்று வாரணாசியில் கங்கைநதியில் லட்சக் கணக்கான மக்கள்தீர்த்தமாடினார்கள்.

## விண்வெளியில் ஒருநாளை கழித்தார்

மாஸ்கோ, ஜன. 15

ரஷ்யா விண்வெளிக்கு விண்வெளிவீரர் ஷாட்டலோ தனது பிரயாணத்தில் ஒரு நாளைக்கழித்து நல்ல நிலையிலுள்ளார்எனச்செய்தி கிடைத்துள்ளது. அவரின் விண்வெளிக்கப்பலோடு நம்பகரமான தொடர்புக்காக விசேஷ வானொலி பொருத்தப்பட்டுள்ளதாகவும் கலத்தின் எல்லாக் கருவிகளும் நன்றாக இயங்குகின்றன எனவும்விண்வெளிவீரர் ஷாட்டஸ்லாவ் தமது பிரயாணத் திட்டங்களை செயல்படுத்த ஆரம்பித்துள்ளதாகவும் சோவியத் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

# பிரஞ்சு நடவடிக்கை அமைதிக்கு ஆபத்தாம்

## இஸ்ரேல் பிரதமர் கூறுகிறார்

டெல்அவிவ், ஜன. 15

இஸ்ரேலுக்கு ஆயுத உதவி தருவதில்லையென்று பிரான்ஸ் செய்திருக்கும் முடிவு மேற்காசிய அமைதியை வெகுவாகப் பாதிக்கப்போகிறது என்று இஸ்ரேல் பிரதமமந்திரி திரு. எஸ். கோல் கூறியிருக்கிறார்.

இஸ்ரேலுக்கு ஆயுத உதவி செய்வதில்லையென்று முடிவுசெய்தாலும் அந்தப் பகுதியிலுள்ள மற்றநாடுகளுக்கு பிரான்ஸ் ஆயுதம் வழங்கும் சாத்தியமில்லையென்று பிரஞ்சு பிரதம மந்திரி பாரிஸில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் லெபனான் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தினால் லெபனானுக்கு ஆயுத உதவி செய்வதாக பிரான்ஸ் வாக்குறுதியளித்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ஜெனரல் டிகாலின் பிரதிநிதியென்று கூறப்படுப்படும் முன்னாள் பிரஞ்சு அமைச்சர் ஒருவர்பேரூட்டில் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்திவருவதாகவும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பசிக்கும் ஏழைக்கு உதவாமல் வெறும் உபதேசங்களை நடத்திக்கொண்டிருப்பதை நான் வெறுக்கின்றேன்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna
Post Box- 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 3-ந் திகதி
(16-1-69)


## புதிய மேயரும் யாழ். நகரமும்

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராக திரு. சி. நாகராஜாவும் உதவி மேயராக திரு. ஆ. துரைராசசிங்கமும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். பொருத்தமானவர்களையும் தகுதியானவர்களையும் மாநகரசபை உறுப்பினர் தெரிவு செய்திருக்கின்றனர். 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பார்கள். இந்த மேயர் தெரிவு நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண நகருக்கு மட்டுமல்ல தமிழினத்துக்கே வழி பிறக்கவகை செய்யவேண்டும். புதிய மேயருக்கும் உதவி மேயருக்கும் யாழ். நகர மக்களுடன் சேர்ந்து நாமும் நல்வரவு கூறுகிறோம், மகிழ்ச்சி தெரிவிக்கிறோம். யாழ்ப்பாண நகரம் மேலும் நல்லமுறையில் அபிவிருத்தியடையுமென்று நம்புகிறோம்.

புதிய மேயராக திரு. நாகராஜா தெரிவு செய்யப்பெற்றதும் அவரைப் பாராட்டி உரை நிகழ்த்திய அங்கத்தவர்கள் பலரும் பல விஷயங்களைக் கூறியதுடன் சில நல்ல யோசனைகளையும் தெரிவித்து மேயர் தமது கடமைகளைச் செய்ய ஒத்துழைப்புத் தருவதாகவும் அறிவித்தனர். மேயராகத் தெரிவு செய்யப்பட்டவரைப் பாராட்டிப் பேசுவதும் அவருக்கு ஒத்துழைப்புத் தருவதாக வாக்குறுதியளிப்பதும் சம்பிரதாயமாக நடைபெறும் நிகழ்ச்சிதான். ஆனாலும் இது வெறும் சம்பிரதாயமாக இனியும் இருந்து விடக் கூடாது. கடந்த காலங்களில் மேயர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டது போன்று புதிய மேயர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர தாங்கள் ஒப்புக் கொள்ளப் போவதில்லையென்றும் அப்படியான ஒரு பிரேரணைக்கு தாங்கள் கையொப்பமிடப் போவதில்லையென்றும் திரு. துரையப்பாவும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இப்போதே அத்திவாரமிடப்பட்டாலும் அதற்கு தாம் இடங்கொடுக்கப் போவதில்லையென்று திரு. துரைராஜா கூறியிருப்பதுவும் நகரின் எதிர்காலத்தைப் பற்றி அதிக நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. தமிழ் காங்கிரஸ் தமிழ் அரசுக் கட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் ஒரு கூட்டாகவும் திரு. துரையப்பா குழுவினர் ஒரு கூட்டாகவும் சேர்ந்து மேயர் பதவிக்கு தகுதியான இருவரின் பெயரை பிரேரித்து ஒருவரை ஒரேயொரு அதிகப்படியான வாக்கினல் தெரிவு செய்திருக்கின்றனர், தேர்தலில் தமிழ்க் காங்கிரசும் தமிழ் அரசுக் கட்சியும் பல்வேறு வட்டாரங்களில் தத்தமது அபேட்சகர்களையும் ஆதரவாளர்களையும் போட்டிக்கு நிறுத்தி ஒருவர் மீது ஒருவர் கடுந்தாக்குதல் பிரசாரம் செய்தாலும் நகரின் முன்னேற்றத்துக்காக ஒன்று பட்டு தங்களுக்குள் ஒருவரை மேயராகத் தெரிவு செய்திருக்கின்றனர். இதேபோல் தேர்தலிலும் மேயர் தெரிவிலும் இந்த இரு கட்சிகளுடன் துரையப்பா குழுவினர் போட்டியிட்டாலும், தேர்தல் யாவும் முடிந்து விட்டதால், நகரினதும் நகரமக்களினதும் முன்னேற்றத்துக்காக அந்தக் குழுவினர் மேயருடனும் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் குழுவினருடனும் ஒத்துழைக்க வேண்டியதும் அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று கட்சி, கோஷ்டி வேறு பாடுகளுக்குச் சிறிதும் இடம் கொடாமல் சகல அங்கத்தவர்களையும் சமமாகக் கருதி அனைவரையும் ஒன்று சேர்த்து, நகரின் முன்னேற்றத்தினதும் நகர மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் மேயர் திரு. நாகராஜாவைச் சாந்திருக்கின்றது. மேயர் தெரிவில் தமிழ் காங்கிரசும் தமிழ் அரசுக் கட்சியும் ஒன்றுபட்டிருப்பது, தமிழ் இனத்தின் நல்வாழ்வுக்குரிய இதர விஷயங்களிலும் அவைகள் ஒன்றுசேர முடியும் என்பதன் அறிகுறியாக விளங்குகிறது. இதற்கான முயற்சியில் யாழ். நகர மேயரே ஈடுபடுவது அவருக்கும் நகருக்கும், இனத்துக்கும் பெருமைதரும். இந்த விஷயத்தில் உதவி மேயரும் பெரும் பணிபுரியலாம்.

யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகத்திலும் யாழ். நகரின் அபிவிருத்தியிலும் புதிய மேயரும் உதவி மேயரும் ஆற்ற வேண்டியபணி அதிகம் இவற்றை நிறைவேற்ற மாநகரசபை அங்கத்தவர்களும் பொது மக்களும் உதவியும் ஒத்துழைப்புமளிக்க வேண்டும்.

## "தமிழ் மக்களின் உரிமைகளை
## இருகட்சிகளும் ஒன்று சேரவே

"தமிழ் மக்களின் இரு பெரும் கட்சிகளான தமிழ் காங்கிரஸும், தமிழரசும் மேயர் பதவிக்காக ஒன்று சேர்வது அழகல்ல. அதை தமிழ்மக்கள் எதிர்பார்க்கவுமில்லை. இலட்சியத்தில் தமிழ்மக்களின் உரிமைகளைப்பெற இருகட்சிகளும் ஒன்றுசேரவேண்டும். இருகட்சிகளையும் அரசியல் ரீதியில் ஒன்று படுத்த மேயர் முயற்சி எடுக்கவேண்டும். பதவி இன்று இருக்கும் நாளை போகும். ஆனல் இலட்சியம் என்றும்நிலைத்து நிற்கும் ஆதலால், இருகட்சிகளும் இலட்சியத்தில் ஒன்றுபடவேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதலாவது கூட்டத்தில், பேசிய முதலாம் வட்டார உறுப்பினர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் மேற்கண்டவாறு கூறினர்.

மேயராகத்தெரிவுசெய்யப்பட்ட திரு.சி.நாகராசாவை முன்னுள் மேயரான திரு. ரி.எஸ். துரைராசாவும், திரு. அ. நடராசாவும் அழைத்துச்சென்று ஆசனத்தில் அமர்த்தினர்கள்.

மேயருக்கான உடைகளை அணிந்துவருவதற்காகசபை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

தமிழரசு, காங்கிரஸ் உறுப்பினர்கள் மேயரை அவரது காரியாலயத்திற்கு அழைத்துச்சென்றனர். சரியாக 3-50 மணிக்கு மேயர் தமது அறையில் உள்ள ஆசனத்தில் அமர்ந்தார். அவர் மேசைக்கு அருகில் உள்ள ஆசனத்தில் மற்ற உறுப்பினர்கள் அமர்ந்தார்கள். மேயருக்கு அருகில் உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் அமர்ந்தார். சிறிது நேரத்தில், மாநகரசபை ஊழியர் ஒருவர் மேயருக்கான உடையை, மேயருக்கு அணிவித்தார். திரு. அ. நடராசா மேயருக்கான சங்கிலியை, மேயரின் கழுத்தில் அணிவித்தார். அதன்பின் எல்லாரும் சபைக்கு வந்தனர்.

நிலையக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவதற்குமுன்னர் அங்கத்தினர் பாராட்டுகளைத் தெரிவித்தனர். முதலாவதாக கொழும்புத்துறை வட்டார உறுப்பினர் திரு. தம்பு கந்தையா பாராட்டைத் தெரிவித்தார்.

### அங்கத்தவர் சுறுசுறுப்பு

அங்கத்தவர்களில் திரு. அ. நடராசா, முழுநேரமும் சுறுசுறுப்பாக காணப்பட்டார். மேயர் தெரிவு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் அவர் ஆசனத்தில் அமராமல் நின்றுகொண்டிருந்தார். மேயர் தெரிவு முடிவடைவதற்கு முன்னரே திரு. அ. நடராசா, உதவி மேயருக்கான பெயரை தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டினர். அருகில் இருந்த திரு. வீரசிங்கம், அவரை பெரும் சிரமப்பட்டு ஆசனத்தில் அமர்த்தினர்.

முதல் வரிசையில் இருந்த திரு. ஏ. ஜி. ராசூரியரிடம் 'ஏன் எங்களுடன் வந்து சேரக்கூடாது' என்று திரு. அந்தோணிப்பிள்ளை கேட்டபோது, அதற்கு அவசியமில்லையென ராஜசூரியர் கூறினர். இடையில் குறுக்கிட்ட திரு. ரி. கே. ராசரத்தினம், 'நல்ல ஸ்பெஷல் பாம் கோர்ட் சாப்பாடு கிடைக்கும் வாருங்கள்' என ராஜசூரியடரிம் கூறிய போது, 'அதுதான் இப்படி உங்களை மறந்த நிலையில் இருக்கிறீர்கள்' என திரு. ராஜசூரியர் கூறினர்.

### இப்படித்தான் நடந்தது தேர்தல்

மேயரைத் தெரிவு செய்யும்படி கமிஷனர் அறிவித்ததும், திரு. ஏ. நடராசா திடீரென எழுந்து திரு. எஸ். நாகராசாவின் பெயரை பிரேரித்தார். திரு. நாகராசா பின் வரிசையிலிருந்த திரு. துரைராசா வைப்பார்க்க, திரு. துரைராசா ஆறுதலாக எழுந்து அனுவதித்தார். உடனே திரு. கே. வி. தெய்வேந்திரன் முன்வரிசையிலிருந்த திரு. ஏ. ரி. துரையப்பாவை பார்த்தபடி எழ முயற்சித்த போது, திரு. ஏ. ரி. துரையப்பா திடீரென எழுந்து திரு. ஏ. விஸ்வநாதனின் பெயரை பிரேரித்தார். அச்சமயம், திரு. விஸ்வநாதன் இருகைகளையும் நாடிக்கு வைத்தபடி, திரு. துரைராஜசிங்கம் இருந்த பக்கத்தை பார்த்துக்கொண்டிருந்தார். அந்நேரம் திரு. துரைராஜசிங்கம் திரு. நாகராஜாவுடன் பேசிக்கொண்டிருந்தார்.

உதவி மேயராக
துரைராஜசிங்கத்
பெயர் பிரஸ்தாபி
பட்டபோது, துரைய
குழுவினர் எல்லோ
திரு. துரையப்பாவை
பார்த்துவிட்டு அமைதி
இருந்தனர். திரு. த
ராஜசிங்கம் உதவிமேய
ஏகமனதாக தெரிவு
யப்பட்டார்.

மேயர் தமது ஆசனத்
அமர்ந்தசிறிது நேரத்
யாழ்ப்பாணம் எம். பி.
ஜி. ஜி. பொன்னம்பல
வவுனியா எம். பி. திரு
சிவசிதம்பரமும், பருத்
துறை எம். பி. திரு.
துரைரத்தினமும் கல
விசேஷ பிரிவில்வந்துஅ
தனர். அச்சமயம்
துரையப்பா அவர்களை
முறை பார்த்தார்.
ஒசிகொரியா அமர்ந்தி
நாற்காலிக்கு அருகில்
றெரு நாற்காலி காலி
இருந்தது. திரு. ஜி.
பொன்னம்பலம், அந்த
காலியில் இருக்காமல்
ஒரு நாற்காலியில் அம
கொண்

முதல்வரிசையில் அ
திருந்தவர்கள்: திரு. ஏ
ராஜசூரியர் திரு. ஏ.
நடராசா, ஜனுப் கா
திரு. எஸ். மார்க்க
திரு. ஏ. ரி. துரைய
திரு. ரி அன்ரனி.

இரண்டாம் வரி
இருந்தவர்கள்: திரு.
தோணிப்பிள்ளை திரு.
ராஜ், திரு. ரி. கே.
ரத்தினம், திருமதி அ
ணியா சுவாமிநா
ஜனுப் பஸீர், திரு. சே

## சரவணை தமிழ் விழா
### இன்றைய நிகழ்ச்சி

ஊர்காவற்றுறை, வியாழன்

சரவணை தமிழ் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்கு சரவணை 'நாகேசுவரி' வித்தியாலய 'தில்லைநாதப்புலவர்' அரங்கில் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

காணி, மின்சார நீர்ப்பாசன இலாகா நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா பிரதம விருந்தினராகக் கலந்து [illegible].

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் [illegible] அறக் கோட்பாடுகள்' வித்துவான் வீ. சி. கந்தையா, கண்ணகி வழக்குரை, உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. 'சைவமுந்தமிழும்', மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை ''வெண்பாதரும் இன்பம்'' என்பனபற்றி உரைநிகழ்த்துவர்.

இதனைத் தொடர்ந்து மஹாகவி தலைமையில் கவியரங்கும் நிகழும் ஏழு கவிஞர்கள் இதில் பங்குபற்றுகிறார்கள்.

நடிகவேள்லடீஸ் வீரமணி கோஷ்டியின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியுடன் விழாமுடிவடையும்.


நெற் கிருமிப் பீ
அறவே ஒழிக்




'என்றெ
என்றின் என்னும் பி

நெற் பீடைக் கிருமிகள் எத்தனையோ. ஒவ்வொ
கும் ஒவ்வொரு வகையான, விலையுயர்ந்த கிருமி
கள் சிபார்சு செய்யப்படுகின்றன. ஆனல் நெற் ப
தாக்கும் எல்லா வகைக் கிருமிப் பீடைகளையும்
ாக அறவே அழிக்க வல்லதென்று நிரூபிக்கப்பட்ட
ாசினி ஒன்றுதான் உண்டு. இத்தகைய
மருந்தே 'என்றெக்ஸ்' 20. இது நெற் கிருமிப் பீ
ாவற்றையும் போகத்துக்குப் போகம், வருடத்
வருடம் வெகு செம்மையாகக் கட்டுப்படுத்த வல்ல
ாசினியெனப் பயிர்ச் செய்கையாளர்கள்
ீண்டும் நிருபித்துள்ளரார்கள். சேற்று நில நெற்
களிலும் மேட்டு நிலக் காணிகளிலும் இலங்கை
நெல் விளையும் உலகின் எல்லாப் பாகங்களிலு
வாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

'என்றெக்ஸ்' 20 முத்திரிக்கையிட்ட, கலப்
செய்ய இடமளிக்காத 16 திரவ அவுன்ஸ் போத்
களிலும் 1, 4, 45 கலன் கலங்களிலும் கிடைக்

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.
AGENTS
றோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA


இவ்
600 புதி

உடுவில், தி
இந்த ஆண்டில் 600
ஆசிரியர்களை இலங்
எல்லாப் பாடசாலைக
நியமனம்செய்யகல்வி
ச்சு நடவடிக்கை எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...களைப்பெற ...வேண்டும்

**— ராஜசூரியர்**

...ராக திரு.
...ங்கத்தின்
...ரஸ்தாபிக்கப்
... துரையப்பா
... எல்லோரும்,
...யப்பாவையே
... அமைதியாக
... திரு. துரை
...தவிமேயராக
... தெரிவுசெய்

... ஆசனத்தில்
... நேரத்தால்,
... எம். பி. திரு.
...ன்னம்பலமும்
... பி. திரு. ரி.
...ம், படுத்தித்
...பி. திரு. கே.
...ம் கலரியில்
...ல்வந்துஅமர்ந்
...யம் திரு.
...வர்களை ஒரு
...தார். திரு.
...அமர்ந்திருந்த
... அருகில் மற்
...லி காலியாக
... ஜி. ஜி.
...ம், அந்த நாற்
...க்காமல் வேறு
...யில் அமர் து

...சயில் அமர்ந்
...: திரு. ஏ. ஜி.
...திரு. ஏ. எஸ்.
... ஜனுப் காதர்,
... மார்க்கண்டு,
... துரையப்பா,
...னி.
... வரிசையில்
...: திரு. அந்
...ளை திரு. போல்
... ரி. கே. ராஜ
...ருமதி அந்தோ
...ாமிநாதன்,
... திரு. கே. வி.

தெய்வேந்திரன், திரு. தம்பு கந்தையா திரு. எஸ். எம். பேரின்பநாயகம்.

மூன்ருவது வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் திரு. ஏ. துரைராஜசிங்கம் திரு. எஸ். நாகராஜா, திரு. ஏ. நடராஜா திரு. எம். வீரசிங்கம், டாக்டர் ஏபிரகாம், திரு. ஏ. விஸ்வநாதன், திரு என். ரி. செல்லத்துரை, திரு. ரி. எஸ் துரைராஜா, திரு எஸ். சிவசுப்பிரமணியம்.

திரு தம்பு கந்தையா கூறியதாவது:-

யாழ் மாநகரசபை சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. கடந்த இரண்டரைவருட காலத்தின் பின் மீண்டும் மக்களாட்சி ஆரம்பமாகிறது. நகரத்தில் ஏராளமான பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை.

**திரு.ஏ. நடராசா** கேட்கவில்லை.

**திரு. தம்பு கந்தையா** கடந்தகாலத்தில் நடந்ததைவிட திறமையான நிர்வாகம் நடத்தப்பட வேண்டும். இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகிய யாழ்ப்பாணத்தை முன்னேற்ற வேறுபாடின்றி ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அரசியல் ரீதியில் நடக்க முற்பட்டால் மீண்டும் நெருக்கடி ஏற்படலாம். நவீன மார்க்கட், புதிய பஸ்நிலையம் திருப்திகரமாக அமைக்கப்பட வேண்டும். வட்டார அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**திரு. ஏ. விஸ்வநாதன்** அரசியல் தேசிய பிரச்னைகளால் தீர்வுகாணமுடியாத தமிழரசு தமிழ்காங்கிரஸ் மேயர் தெரிவில் ஒன்றுபட்டிருக்கிருர்கள். இரண்டு கட்சிகளும் நகர நிர்வாகத்தில் மட்டுமன்றி தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒன்று சேர்வார்கள் என எதிர்பார்க்கிருேம்.

திரு. ஏ. விஸ்வநாதன்:- நாம் பல்வேறு கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் நமது ஆதரவு என்றென்றும் உண்டு. முதல்வர் நடுநிலைமை வகித்து நல்ல நிர்வாகம் அமைய பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ளவேண்டும்.

**ஜனுப் ஜி. எம. பஷீர்:** முஸ்லிம் மக்கள் சார்பில் ஒன்றையே தெரிவித்துத் கொள்கிறேன். மேயர் தெரிவிற்கு சற்று முன்வரை நடந்த விஷயங்களையும் மறந்து இன, மொழி வேறுபாடின்றி நகரத்தை முன்னேற்ற முயலுவோம்.

**ஜனுப் எம.ஏ. சி. எஸ. ஏ. காதர்:** நான் மாருக வாக்களித்தாலும் நகர முன்னேற்றத்திற்காக ஒத்துழைப்பேன். இனிமேல் நடக்கக்கூடிய விஷயங்கள் கடமை கட்டுப்பாட்டிற்கு அமைந்திருக்க வேண்டும்.

திரு. கே. எஸ் நடராசா: கட்சி அடிப்படையில் நிர்வாகம் நடக்கக் கூடாது தெய்வ நீதிதான் எப்பொழுதும் நடக்கும். மேயர் தெரிவிலும் அது நடந்து விட்டது. பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

திரு. போல்ராஜ்: வட்டார மக்கள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சிவசுப்பிரமணியம்: ஆணையாளர் புதியவராக இருந்தாலும் முதல் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தியதையிட்டுப் பாராட்டுகிறேன், நகரபிதா வயதில் குறைந்தபோதிலும் அனுபவத்தில் கூடியவர்கள் நாங்கள் ஒற்றுமைப்படாமல் சுதந்திரம்வேண்டும். உரிமை வேண்டும் எனக் கேட்பதில் பிரயோசனமில்லை. ஊழல்கள் ஒழிக்கப்படவேண்டும். ஊழல் நிர்வாகம் தமிழருக்கே வெட்கக்கேடானது.

**திரு. நடராசா:** வெட்கம், வெட்கம்.

**திரு. சிவசுப்பிரமணியம:** மானமற்ற தமிழன், மதிகெட்ட தமிழன், பட்டம் பதவிக்காக எத்தனையோ செய்கிருன். அந்த நிலைமை மாறவேண்டும்.

**திரு.என். செல்லத்துரை:** இதுவரை அழிவு வேலைகள் நடைபெற்றுவந்தன. இனிமேல் ஆக்கவேலை நடைபெறவேண்டும். மின்சார, குடிநீர் வசதி அவசியம் செய்யப்படவேண்டும். இதனைத்தீர்க்க மேயர் முயற்சி எடுக்கவேண்டும்.

**திரு.அந்தோனிப்பிள்ளை** முன்பெல்லாம் சபையிலும். கலரியிலும் கூச்சலும் குழப்பமும் அடிக்கடி நிகழுவது வழக்கம். இம்முறை எல்லாரும் வரவேற்கக்கூடியதாகக் கூட்டம் நடைபெறுகிறது. இதுவரை ஒன்று சேராத கட்சிகள் ஒன்றுபட்டதாகச் சிலர் கூறினர். எங்களைப் பொறுத்தவரை கட்சி வேறுபாடில்லை. மேயர் தெரிவு விஷயத்தில் ஒன்ருகவே செயல்ப்பட்டோம்.

**திரு. அன்ரனி:** வடிகால் மின்சாரம்; குடிநீர் ஆகியவற்றில் மேயர் கவனம் செலுத்தவேண்டும்.

**திரு. ஏ ஜி. ராஜசூரியர்:** மேயர் பதவிக்குமட்டுமன்றி இலட்சியத்திற்காகவும், தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் ஒற்றுமைப்பட வேண்டும். அப்படி ஒற்றுமைப்பட்டால் தமிழ்மக்களுக்கே பெருமை

**திரு. ஏ.ரி. துரையப்பா:** (திரு. ஜி. ஜி. பொனம்பலம் இருந்த பக்கத்தை பார்த்து) தமிழ்ச்சாதியே பெருமைப் படும்.

**திரு. ராஜசூரியர்:** ஆமாம் தமிழ்ச்சாதியே பெருமைப் படும்.

**திரு. ரி. எஸ். துரைராஜா:** கடந்தகாலத்தில் இங்கு ஊழல் நடந்தது உண்மை ஊழலைப்போக்கவேண்டும் என்பதற்காகவே, இருகட்சிகளும் ஒற்றுமைபட்டுள்ளன.

**திரு. ஏ. நடராசா:** உண்மை உண்மை.

**திரு.ரி. எஸ். துரைராஜா:** நாங்கள் நடந்துகொண்ட விதம்பற்றி இலங்கை வாழ் தமிழ் மக்கள் எல்லாருமே நம்மைப் பாராட்டுவர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அத்திவாரம் இனிமேல் எழும்பாது. முன்பு நடந்ததுபோல் இனிமேல் நடக்காது. இன்னும் சில வாரத்தில், அத்திபாரம் போட சிலர் முயலுவார்கள். அவர்களுக்கு கல்லோ சுண்ணும்போ கிடைக்காது.

**திரு. கே. வி. தெய்வேந்திரன்:** கடந்த காலத்தில் மேயர்களை ஏற்றி இறக்கியதுயார்? 72 மணி நேரத்தில் தமிழரசு, காங்கிரஸ் கோஷ்டி திரு. ஜோனை இறக்கினுர்கள். நல்ல நிர்வாகத்தை கெடுத்தார்கள் உதவி மேயருக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். தற்போதைய மேயரையும் (திரு. நாகராசா) முன்பு ஒருதடவை இறக்கியது தமிழ் காங்கிரஸ் தான்.

**திரு. ஏ. நடராசா:** நீரும் சேர்ந்துதான்.

**திரு. கே. வி. தெய்வேந்திரன்:** ஆம் நாமும் சேர்ந்து தான் இறக்கினேம் இந்த மேயர் நான்கு வருடங்கள் கடமையாற்ற வேண்டும். என விரும்புகிறேம்.

**திரு. ரி.கே.ராசரத்தினம்:** எந்தக்காரணத்தையும் முன் வைத்து நாங்கள் ஒத்துழைக் ... இருந்து. நகர அபிவிருத்தி கருதி ஒத்துழைப்புக்கொடுத்து, மேயர் பதவியை பெருந்தன்மையுடன்கொடுத்தோமேயன்றி வேறுகாரணமில்லை. முன்பு இங்கு நடந்த ஊழலால் எல்லாருக்கும் அவமானம் இனிமேல் அப்படி எதுவும் நடைபெருது

**திரு. எம். எஸ். பேரின்ப நாயகம்:** கலைக்கப்பட்ட மாநகரசபையிலும் ஆணையாளர் ஆட்சியிலும் நடந்த ஊழலைக்கண்டுபிடிக்க முதல் வருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

**ஏ. ரி. துரையப்பா:** யாழ்ப்பாண சரித்திரத்தில் முக்கியமானதினம். நகர சபைக்காலத்தில் இருந்தே இந்த கட்டிடத்திற்கு வராதவர்கள் வந்திருக்கிருர்கள். ஒருபோதும் ஒன்று சேராத இந்த அரசியல் கட்சிகள் இன்று ஒன்றுசேர்ந்ததால் தமிழினத்திற்குவிடிவு கிட்டிவிட்டது போலிருக்கிறது.

தேர்தலின் போது இரு கட்சிகளும் போட்டியிட்டன. 3 அங்கத்தவரைக் கொண்ட ஒரு கட்சிஉறுப்பினர் மேயராக வந்திருந்தால் அது துரையப்பாவினுல் என்பதை மறக்கக் கூடாது.

**கலரியில் ஒரு குரல்:-** உண்மை உண்மை.

**திரு. ஏ.ரி. துரையப்பா:** ஒரு மாதத்திற்கு ஒரு மேயராக நடந்த காலம் ஞாபகமிருக்கிறது, இரண்டு தமிழ் கட்சிகளும் சேர்ந்து நடத்திய காலமது. மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வரநானே எனது குழுவினரோ கையொப்பமிட மாட்டோம். மேயரின் ஆதரவாளர்கள் கொண்டுவந்தாலும் கையெழுத்திடோம். மேயர் ஒரு சமயம் நல்லூர் தொகுதிக்குப் போட்டியிட்டால், இன்று கூட்டுச்சேர்ந்த கட்சிகளில் ஒன்று அப்போது அவரை எதிர்க்கும். அதுமட்டுமல்ல அவர்மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டு வரக் கூடஎங்கள் உதவியை நாடிவருவார்கள். மேயர் தெரிவில் ஒன்றுபட்ட இரு கட்சிகளும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். நிர்வாகம் சீராக நடந்தால் ஏற்றி இறக்கும்நாடகத்திற்குநான் ஆதரவுகொடுக்கமாட்டேன்

**உதவிமேயர் திரு. துரைராஜசிங்கம்:-** எவ்வித நிபந்தனையின் பேரிலும் நான் இப்பதவியை ஏற்கவில்லை. சரியான பாதையில் தான் நடப்பேன். நான் தேர்தல் கூட்டங்களில் கூறியபடி நடந்து என்வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன். ஆதலால் எவரும் என் மீது குறைசொல்ல இடமில்லை.

மேயர் நாகராசா நன்றி தெரிவித்துப் பேசியதைத் தொடர்ந்து குழுக்களுக்கான தெரிவு நடைபெற்றது. திரு. கே. வி. தெய்வேந்திரன்:- குழு உறுப்பினர் தெரிவை வேறு ஒரு தினம் வைத்துக் கொள்வோம்.

திரு. ரி. கே. ராசரத்தினம்: உறுப்பினர்கள்தெரிவுஇன்று நடைபெறவேண்டும்.

திரு. ஏ. ரி. துரையப்பா:- அவர் புதியவர் அனுபவமில்லை.

திரு. ரி. கே ராசரத்தினம்:- புதியவரென்ருலும் எனக்கு எல்லாம் தெரியும்.

திரு. ரி. எஸ். துரைராசா: வழக்கப்படி முதல் கூட்டத்தில்தான் உறுப்பினர்கள் தெரிவு நடைபெறும் ஆதலால் இன்றே நடைபெற வேண்டும்.

மேயர்: இதற்கு தீர்மானங்கள் அவசியமில்லை. உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை மட்டும் தெரிவித்தால் போதும்.

நிதி, மராமத்து, சுகாதா மின்சாரம், ஆகியவற்றிற்கு நிலையக்குழு தெரிவு செய்யப்பட்டது.

## திரு. ..ந்தையா அருணுசலம்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய துணை அதிபர், திரு. கந்தையா அருணுசலம் 1932-ம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து வந்து உதவி ஆசிரியராக மேற்படி கல்லூரி முகாமைகாரர் அமரர் முதலியார் அத்தியார் அருணுசலத்தால் நியமிக்கப்பட்டார்.

தொடக்கத்தில் எப்படி அவருடைய தோற்றம், நடை, தொனி இருந்ததோ அப்படியே அவருடைய 60-ம் ஆண்டு பூர்த்தியாகும் வரை ஒரு மாற்றமுமில்லாமலிருந்தது. அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னேற்றத்துக்கு இவர் ஒரு முக்கிய மானவராகவும் முகாமைக்காரனின் விசுவாசமுள்ள ஊழியனுகவும் பாடசாலையை நடத்துமுறையில் அவரின் வலது கரமாகவும் விளங்கிய பெருமை திரு. க. அருணுசலம் அவர்களுக்கே உரிய தனிப் பெருமையாகும்.

1935-ம்ஆண்டில்அத்தியர் இந்துக் கல்லூரிக்கும் இந்து மதத்திற்கும் சுருங்கச் சொன்னுல் நீர்வேலி வாழ் மக்களுக்கும் ஏற்படக் கூடிய ஒரு துர்அதிஸ்டப் பாதையை தனது தொழிலை அற்பணித்து முகாமையாளரின் நம்பிக்கையைப் பலப்படுத்தி வெற்றியீட்டிய பெருந்தகையர்.

அரசாங்கம் பாடசாலைகளை எடுக்குமுன் முகாமைக்காரர்தான் ஆசிரியர்கட்கு வேதனம் கொடுத்து வந்தார்கள் ஆனுல் அரசாங்கம் ஒரு பகுதியைக் கொடுத்து வந்தது. இத்தொகையை வருடம் முடிவில் ஒருமித்துக் கொடுத்தபடியால் பல கஷ்டங்களில் ஈடுபடவேண்டிய நிலைமை நேரிட்ட சமயத்திலும் இப்பாடசாலையை விட்டு விலகாது ஊருக்காகவும் மாணவர்களின் நன்மைக்காகவும் பாடசாலையை விட்டு விலகாது ஒத்துழைத்த பெரியார்களில் இவரும் ஒருவர்.

1968-ம் ஆண்டுக்குமுன் விளையாட்டுமைதானம் சீர்கேடான முறையில் ஒழுங்கற்றதாகவும், மேடுபள்ளமாகவும் காணப்பட்டது. இவரின் சீரிய முயற்சியால் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைத்து அந்த மேடுபள்ளத்தை நிரப்பக்கூடியதாக இருந்தது மட்டுமன்றி, முதுகெலும்பாக நின்று கடமையாற்றினுர்.

மாணவர்களை சரியான பாதையில் செல்லவிடுவதும் அவர்களுக்குத் தெரியாதவற்றைத் தெரிவிப்பதும், புத்திமதி புகட்டுவதும் அவரின் மிகப்பெரிய பண்பாகக் காணப்பட்டது.

அ. அ. பாலசுப்பிரமணியம்

## சேவையில் தோய்ந்தவர்



சமூக சேவைக்குத் தம்மை அர்ப்பணித்த திரு. பி. எம். சங்கரப்பிள்ளைவட்டுக்கோட்டையின் பிரபல வர்த்தகரும் அரிசிஆலை முதலாளியுமான திரு. முத்தையா அவர்களின் புத்திரராவார் இவர் 1906-ம் ஆண்டு கார்த்திகை மாதம் வட்டுக்கோட்டையில் பிறந்தார். இவர் ஆங்

(8-ம் பக்கம் பார்க்க)

...ப் பீடைகள் யாவற்றையும் ...ஒழிக்க உபயோகியுங்கள்

...றெக்ஸ்'20

...ரும் பொருளின் வலுமிக்க உருவம்

... ஒவ்வொன்றுக்
...ர்ந்த கிருமிநாசினி
...ல் நெற் பயிரைத்
...களையும் சிக்கன
...பிக்கப்பட்ட கிருமி
...தகைய 'சஞ்சே'
... கிருமிப் பீடைகள்
...ம், வருடத்துக்கு
...டுத்த வல்ல கிருமி
...ர்கள் மீண்டும்
... நில நெற்காணி
... இலங்கையிலும்
...கங்களிலும் இவ்

..., கலப்படஞ்
...ன்ஸ் போத்தல்
...ம் கிடைக்கும்.

உங்கள் நெற்பயிரை எல்லா வகையான கிருமிப் பீடைகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு பயிர் 10-14 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் பருவத்தில் நன்ருக 'என்றெக்ஸ்' 20 தெளிக்கத் தொடங்குங்கள். பின்னர் மாதம் ஒரு முறை தெளித்து வரவும். 2 கலன் நீருக்கு 1 திரவ அவுன்ஸ் 'என்றெக்ஸ்' 20 வீதம் கலந்த 32-40 கலன் தெளி திரவத்தை ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும். இதற்காகும் செலவு, உபயோகிக்கும் அளவுப் பிரமாணத்தையும் கொள்வனவு செய்யும் அளவையும் பொறுத்து, ஏக்கருக்கு ஒரு முறைக்கு ரூ. 6/- முதல் ரூ. 10/- வரை அமையும். பீடைகளின் தொல்லையற்ற ஆரோக்கியமான பயிரும் அமோக விளைச்சலும் கிடைப்பதற்கு இது அற்ப செலவே.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

## ...வ்வருடத்தில் புதிய ஆசிரியர்

...டுவில், திங்கள்
...டில் 6000புதிய
... இலங்கையின்
...டசாலைகளிலும்
...யகல்வி அமை
...க்கை எடுத்து

வருவதாக அறியப்படுகிறது.

புதிதாக நியமனம் பெறுவோரில்4090 பேர்மாணவ ஆசிரியர்களாக இருப்பர்.

## பிரசுரம் நிறுத்தம்

கொழும்பு, புதன் ''சம்மத சிங்களய'' என்னும் சிங்கள இலக்கண நூல் பிரசுரமாகாமல்நிறுத்தப்பட்டிருக்கிறதாம் இந் நூலில் தொடர்ந்தும் பல அச்சுப்பிழைகள் காணக் கிடப்பதே இதற்குக் காரணமெனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வள்ளுவருக்கும் நாவலருக்கும் தமிழர்கள் கடமைப்பட்டவர்கள்'

## சரவணை தமிழ் விழாவில் அறிஞர்கள் பாராட்டு

ஊர்காவற்றுறை, புதன் ''தமிழ் வளர்ச்சி தனித்து முன்னேறுவதிலும் பார்க்க சைவத்தைத் தொடர்பு படுத்தி இயங்குவதில்பெரும் பயன்உண்டு. இதைநிரூபித்துக்காட்டியவர் நம்நாவலர் பெருமான். பிதா, சைவம், மாதா தமிழ் என்ற வகையில் நாம் சைவத்தையும், தமிழ்மொழியையும் வளர்ச்சிபெறத் தொண்டாற்ற வேண்டும்''

நேற்று மாலை நடைபெற்ற சரவணை சேவாமன்றத்தின் தமிழ் விழாவின் நாவலர் அரங்கு முதல்நாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமைதாங்கிய யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன் சரவணை 'நாவலர்' விளையாட்டு மைதானச் சந்தியிலிருந்து யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி, முருகேசம்பிள்ளை, வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. சி. அம்பிகைபாகன், திரு. இ. வி. தளையசிங்கம் ஆகியோர் ஊர்வலமாக விழா நடைபெறும் இடத்திற்கு மேளவாத்தியசகிதம் அழைத்து வரப்பட்டனர். வழியில் சரவணை நெசவு நிலையத்தாரும். சரவணை கிராம முன்னேற்றச் சங்கத்தாரும் அரசாங்க உதவி அதிபருக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

சரவணை நாகேசுவரி வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட நாவலர் அரங்கில் சரவணை சேவா மன்றக் கொடியை திரு. இ. வி. தளையசிங்கம் ஏற்றிவைத்தார். மாணவிகளின் தேசிய கீதத்துடன் விழா ஆரம்பமானது. சரவணை சேவா மன்றத் தலைவர் திரு. செ. ச. சிவம் வரவேற்புரை நிகழ்த்தினார், வேலணைத் தீவு சைவ இளைஞர் சபை ஒரு காலத்தில் ஆற்றிய தொண்டினை திரு. சிவம் தமது வரவேற்புரையின்போது பாராட்டிப் பேசினார்.

யாழ்.மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் மேலும்பேசியதாவது:

நாவலர் பெருமான் வாழ்ந்தகாலத்தில் அவர் பெருமையை, தொண்டினை பெரிதும் பாராட்டாதநம்மக்கள் இன்று அவரது சீரிய சைவத் தமிழ்த் தொண்டைப்போற்றுகின்றனர். ஆண்டு செல்லச் செல்ல அவர்தம் பெருமைவளர்ச்சி பெற்றுவருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

விழா நிகழ்ச்சி நிரலில் 'தமிழ்த்தாய் வணக்கம்' என்று இருப்பதிலும் பார்க்க 'கடவுள் வணக்கம்' என்று இருப்பது நாவலர் அரங்கு நிகழ்ச்சிகளுக்கு பொருத்தமானது என அவர் குறிப்பிட்டார். சைவத்திற்கு முதல் இடமும் அடுத்து தமிழுக்கு இடமும் கொடுத்தலே சாலச் சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. ச. அம்பிகைபாகன் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

மாணவர்கள் நாலடியார், நல்வழி. நீதிவெண்பா போன்ற நூல்களை நன்கு படித்து அதன்படி நடக்க முற்படவேண்டும். சினிமாப் பார்ப்பதுபோன்றவைகளில் மாணவர் நேரத்தை செலவிடாது ஆக்கம்தரும் உடல் உழைப்பிலும், கைத்தொழில் விவசாயம் போன்ற துறைகளிலும் உழைக்கமுன்வரவேண்டும். தீவுப்பகுதி மாணவர்கள், நல்லசிந்தனையாளர்களாயும், விவேகமானவர்களாயும் வளர்ச்சி பெற்று வருவது பாராட்டத்தக்கதாகும்.

நாவலர் காட்டிய தமிழ் வசனநடை.' என்னும் பொருள் பற்றி பேசிய இரசிகமணி திரு. கனக செந்திநாதன் பாலபாடம் நூல்களில் நாவலரின் சிலசொற்களை எடுத்துக்காட்டி நாவலரின் வசன நடையின் திறமையைப் பாராட்டிப் பேசினார். சென்னையில் நிகழ்ந்த தமிழ் விழாவில் நாவலர் வசனநடை பற்றிக் குறிப்பிடாமல் விட்ட பெரும் குறையை அவர் எடுத்துரைத்தார். நாவலர் பற்றி பண்டிதமணியின் கருத்துக்களை எடுத்துக்காட்டி நாவலர் வசனநடையை நாம் கைக்கொள்ள வேண்டும் போற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

'வள்ளுவன் கண்ட பொருள்' என்பது பற்றிப் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் அறத்தைப் போற்றும் அரசாங்கம்தான் நிலை பெறும் அறத்தைப் போற்றாத அரசு வீழ்ச்சியடையும் எனக் கூறினார். ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அமைய வள்ளுவர் வகுத்தவழி யில் நாம்நடக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வள்ளுவர் காட்டிய அற நெறிகளை நாம் போற்ற விழா எடுத்தால் மட்டும் போதாது. வள்ளுவத்தை நம் வாழ்க்கையில் கைப்பிடிக்க வேண்டும். ஈழத்து சிவானந்தமும் இலக்கியம் என்றால் என்ன? என்பது பற்றிப் பேசினார்.

### தமிழ் விழா மலர்

விழாச் சபையினரால் வெளியீடு செய்யப்பட்ட தமிழ்விழா மலரை திரு. அம்பிகைபாகன் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். சரவணையூர் தில்லைநாதப் புலவர் பெருமையையும் திரு. அம்பிகைபாகன் பாராட்டிப் பேசினார். வேந்தனார் சொல்வன்மை மிக்க புலவர் எனவும் அவர் குறிப்பிட்டார். தமிழ்விழா மலர் முதற் பிரதியை திரு. வி. சேதுகாவலர் பெற்றார்

### 'பா' அரங்கேற்றம்

அல்லைப்பிட்டியூர் கவிஞர் சத்தியசீலன் அவர்களின் 'பா' நூல் அரங்கேற்றம் இவ் விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்றது, அரங்கேற்ற வைபவத்தின் போது சரவணை சேவாமன்றக் காரியதரிசி திரு. துளசிகாமணி கவிஞரின் பா நூலை சபையோருக்கு அறிமுகம் செய்து வைக்க சேவாமன்றத் தலைவர் திரு. செ. ச.

(7-ம் பக்கம் பார்க்க)

விழிப்புணர்ச்சி பெறுங்கள்!



மஸி - பெர்குசன்

என்பதன் பொருள்

✓ உலகமுழுவதும் பரீட்சித்துச் சோதிக்கப்பட்டது

✓ நாடு முழுதும் வியாபித்த விற்பனைக்குப் பிற்பட்ட சேவை

✓ அசல் மாற்றுறுப்புகள் தாராளமாகக் கிடைக்கும்

✓ உலகின் பல பணி புரியவல்ல வெகு கச்சிதமான ட்ராக்டர்

✓ பரந்துபட்ட வகையான துணை உறுப்புக்கள் கொண்டது

✓ பிரவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்டினுல் விற்பனையும் பராமரிப்புச் சேவையும் செய்யப்படுவது

ட்ராக்டர் ஒன்றை வாங்குமுன் கண்ணைத் திறந்து நன்ருக அதைப் பாருங்கள்

பிரவுண் அன்ட் கம்பனி
லிமிட்டேட்
விவசாயப் பிரிவு
தேவநம்பியதிஸ்ஸ ரேட்டி,
கொழும்பு 10. தொலைபேசி: 93097

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தெரிவு கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை இராணுவ தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ். மாவட்ட அரசாங்க இலாகா தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இராணுவக் கோஷ்டி வெற்றி பெற்றது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன் இரு கோஷ்டி வீரர்களையும், அரசாங்க இலாகா சங்க உதைபந்தாட்ட பொறுப்பாளர் திரு. யான்ஸன் மேஜர் மொறீஸ் ஜெயவீராவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடங்களின் பின், இராணுவக் கோஷ்டியின் முன்னணி வீரர் சதூக்கீன் முதலாவது கோலைப் போட்டார். இக் கோஷ்டியின் பின்னணி வீரரான கே. பந்தசேரு மிகவேகமாக இரண்டாவது கோலைப் போட்டார். ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை இராணுவக் கோஷ்டியினரின் கால்களிலேதான் கூடுதலாக பந்து வட்டமிட்டவண்ணம் காணப்பட்டது. இடைவேளைக்கு முன், யாழ். அரசாங்க கோஷ்டியினர் பல இலகுவான கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டனர். இக் கோஷ்டியின் இடது உள் முன்னணி வீரர் பென்டிற் இடைவேளைக்கு சற்று முன் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது இராணுவக் கோஷ்டி 2 கோல்களையும், யாழ். அரசாங்க கோஷ்டி ஒரு கோலையும் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின் இராணுவக் கோஷ்டியின் ஆட்டம் மேலும் திறமையாகக் காணப்பட்டது. இக் கோஷ்டியினரின் அபாரமான 'பாசிங்' கால், யாழ். அரசாங்க கோஷ்டியினர் தடுமாறினர். இராணுவக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான ஏ. எச். எம். அமீன், கே. ஜி. நந்தசேரு ஆகியோர் மேலும் இரு கோல்களைப் போட்டனர்.

ஆட்டம் முடிவடைவதற்கு இரு நிமிடங்கள் இருக்கும் போது யாழ். அரசாங்க கோஷ்டியினருக்குகிடைத்த 'பெனல்டி' சந்தர்ப்பத்தையும பயன்படுத்தாது விட்டுவிட்டனர்.

யாழ். அரசாங்க கோஷ்டியில், காப்டன் சூசைப்பிள்ளை, மரியநாயகம், அன்வர் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாக காணப்பட்டது. ஆட்டம் முடிவடையும் போது இராணுவக் கோஷ்டி 4—1 கோல்களால் யாழ். அரசாங்க தெரிவுக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப் போட்டிக்கு திரு. ஜெயராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

# வவனியா-உரும்பராய் மோதல் முடிவு

உரும்பராய். வியா.

விளையாட்டுக் கழகங்களின் ஆதரவின் கீழ் நடைபெறும் போட்டிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் 'ஏ' பிரிவு விளையாட்டுக் கழகமும், வவனியா 'ஏ' பிரிவு விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

வவனியா நகரசபை உபதலைவர் திரு. எஸ். புவனேந்திரன் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆட்டம் தொடங்கி 20 நிமிடங்கள் வரை இரு கோஷ்டிகளும் விட்டுக் கொடுக்காமல் விளையாடிக் கொண்டிருந்த பொழுது உரும்பராய் கோஷ்டியைச் சேர்ந்த பவசிங்கம் தனக்கு கிடைத்த பந்தை மிகவும் சாதுரியமாகக் கொண்டு சென்று ஒரு கோலைப் போட்டார்.

இதைத் தொடர்ந்து இரு கோஷ்டிகளும் அபாரமாக விளையாடியது. சில நிமிடங்களின் பின் உரும்பராய் கோஷ்டியைச்சேர்ந்த இலகுநாதனும், மதுரைநாயகமும் முறையே 2, 1 என்ற நிலையில் கோல் போட்டு தமது கோஷ்டியின் இடைவேளைவரையிலான கோல் எண்ணிக்கையை 4 0 ஆக உயர்த்தினர்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் வவனியாக் கோஷ்டியினர் மிகவும் திறமையாக விளையாடினர். வவனியா கோஷ்டியினர் மிகவும் நுற்பமாக எதிர்க் கோஷ்டிக்குள் கோல் அடிக்க எத்தனித்த போதெல்லாம் உரும்பராய் கோஷ்டியைச் சேர்ந்த மத்திய பின்னணி வீரர் காப்டன் தங்கராசாவின் அதிர் அடிகளினல் முறியடிக்கப்பட்டன. இதனல் இவர்கள் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களை இழந்தனர். இதைத் தொடர்ந்து உரும்பராய் கோஷ்டியினர் புது உந்வேகம் பெற்று விளையாடத் தொடங்கினர். இலகுநாதன் ஞானசோதி, மதுரைநாயகம் முறையே 1, 2, 1 முறையில் கோல்போட்டு தமது கோஷ்டியின் வெற்றிக்கு உறுதிபுரிந்தனர்.

இறுதியில் உரும்பிராய்க் கோஷ்டி வவனியாக் கோஷ்டியை 8-0 கோலால் வெற்றி பெற்றது.

வவனியா நகரசபை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு என். சவுந்தாாயகம் மத்தியஸ்தராகவிருந் ார்.

## வள்ளுவருக்கும் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவம் முதற்பிரதியை பெற்ரூர். கவிஞர் சத்தியசீலன் பாவடிவில் தமது நன்றியை தெரிவித்துக் கொண்டார்! தீவுப்பகுதி காரியாதிகாரி கவிஞரின் திறமையைப் பாராட்டிப் பேசினுர். ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட தமிழ் விழாவில் கலைஞர் வேல் ஆனந்தனின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## டயமண்ட் "பீ" வெற்றி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை யூனேற்றெட்விளையாட்டுகழக ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி டயமண்ட் 'பீ' கோஷ்டியும் வதிரி பொமேஸ் கோஷ்டியும் மோதிக் கொண்டதில், டயமண்ட் கோஷ்டி 5--2 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. எஸ். வைத்தியநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## திறங் கோல் காப்பாளர்

பருத்தித்துறை, புதன்

வதிரி போமேஸ் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திறம் கோல்காப்பாளராக ஸ்பேஸ் கோஷ்டியைச் சேர்ந்த சிவலோகநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு பொமேஸ் கழகம் ஒரு வெற்றிக்கேடயத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது,

சிவலோகநாதன் உரும்பராயைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




எல்லா வழிகளிலும் சக்தி

ஒவ்வொரு யூ ஆசா பற்றரியும் நீடித்த பாவிப்புக்குரிய சக்தியை உள்ளடக்கியுள்ளது. உலகப் புகழ்பெற்ற நவீன தொழில் நுட்ப வல்லுநர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட யூ ஆசா பற்றரி எல்லாவித பற்றரி வகைகளிலும் முன்னுக்குவைத்து எண்ணத் தக்கதும் தரத்தில் உத்தரவாதமுள்ளதுமாகும்.

18 மாத உத்தரவாதமுள்ளது. எந்த ரக பழைய பற்றரிகளுக்கும் ரூபா 15/- திருப்பிக் கொடுக்கப்படும்.

வாங்குவதற்கு சிறந்தது

யூ ஆசா




ஏக விநியோகஸ்தர்கள்:

ஈ. பி. கிறிஸி அன்ட் கோ., லிமிட்டெட், கொழும்பு. செனித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கம்பர் கவிவிருந்து'

படைத்து அளிப்பவர்:

நல்லை ஆதீனகர்த்தர், முத்தமிழ்மணி

## ஸ்ரீமத் சுவாமிநாத த பிரான் சுவ மி ள்


இலங்கையின் பல பாகங்களில் மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேஷியா, தமிழ்நாடு முதலாம் தமிழ்கூறு நல்லுலகம் எங்கும் கதாகாலட்சேபமாக கம்ப இராமாயணக்காதையை கவிநயம் சொட்டச்சொட்ட புதிய புதிய கருத்துக்களுடன் பல்லாண்டுகளாக ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் வழங்கி வருகிறார். ஆயினும் அவரது புதிய கருத்துக்களும் அவர்தரும் கம்பநாட்டாழ்வாரின் கவிவிருந்தும் இதுவரை எழுத்து வடிவில் வந்ததில்லை. கம்பரின் கவி நயத்தை இரசிகமணி சிதம்பரநாத முதலியார், ராஜாஜி, பி. ஸ்ரீ. போன்ற தமிழ்நாட்டறிஞர்களும் ஈழத்து அறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் எழுத்துவடிவில் தந்திருக்கின்றனர். ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் படைக்கும் 'கம்பர் கவிவிருந்தை' 'ஈழநாடு' மக்களுக்கு வாரிவழங்கவிருக்கின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தம்பிரான்சுவாமிகள் படைக்கும் **'கம்பர்கவி** விருந்'தின் முதல் படையல் 25—1—69-ல் 'ஈழநாடு' வாரமலரில் நீங்கள் சுவைக்கலாம்.

வட்டுக்கோட்டை கிராமசபை

# தலைவர், உபதலைவர் போட்டியின்றித் தெரிவு





வட்டுக்கோட்டை, புதன் பன்னிரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட வட்டுக்கோட்டை கிராமசபையின் புதிய தலைவரும் உபதலைவரும் இன்று போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இன்று காலை 9-15க்கு நடைபெற்ற இத்தெரிவில் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். நிற்சிங்கம் போட்டி யின்றி தலைவராகவும் 4-ம்வட்டார அங்கத்தவர் திரு. என். ரத்தினசிங்கம் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்டார்கள்.

5-ம் வட்டார அங்கத்தவர் திரு. தம்பு கணபதிப்பிள்ளை தலைவரது பெயரைப் பிரேரித்தார். 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. இராசையா சண்முகநாதன் அனுவதித்தார்.

தெரிவை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு, ஏ. ஜோசேப் நடாத்திவைத்தார்.

## பிடி அரிசி சேமிப்பு இயக்கம்

உடுப்பிட்டி, புதன்

"இன்று பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருகின்றது. இதனால் குடும்ப வாழ்க்கைப் பிரச்னைகளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இத்தருணத்தில்பொதுமக்கள் சேமிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பணக்காரர்கள் தான் சேமிக்க வேண்டும் என்ற நியதியில்லை. ஏழைகளும் சேமிக்கலாம்.

பிடியரிசி சேமிப்பு இயக்கமே இதற்கு ஒரேவழி. ஒவ்வொருகுடும்பத்தவர்களும் தினமும்ஒருபிடி அரிசியைப் பத்திரமான பெட்டியொன்றில் போட்டு வைப்பதைவழக்கமாகக் கொள்ள வேண்டும். இவ்வித முறை,

இவ்வாறு கோரும் வேண்டுகோள் ஒன்றினை உடுப்பிட்டித்தமிழ்மன்ற இணைச் செயலாளர்கள் திரு. நா. இராமச்சந்திரன் திரு.எஸ். ஆறுமுகம் ஆகியோர் விடுத்துள்ளனர்.

## தை பிறந்... ம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அசியல், கல்வி, பொருளாதாரத்துறைகளில் எவ்வளவு தூரம் முன்னேறி விட்டன என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு நூல் நிலையங்களில் ஆதாரக் கல்வி அவசியமாகும். போதிய நூல் நிலையங்கள் கிராமங்களில் இல்லாததால் தமிழ் கலைகளை, தமிழ்ப்பண்பாடுகளை, தமிழ்ப் பொக்கிஷங்களை எல்லாம் தமிழ் மக்கள்மறந்து விட்டார்கள். சங்கிலியன், கர்ணன், பாரியார் என்றால் அவர்களுக்குத் தெரியாது போய்விட்டது.

கட்டடத்திற்கான காணியை பூமிதானம் செய்த காலஞ்சென்ற சிவநெறிக் காவலர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளையின் திருஉருவபடத்தை வழக்கறிஞர் திரு. என். ஆர். கனகநாயகம் திரை நீக்கம்செய்து வைத்தார்.

செல்வநாயகம், வணக்கத்துக்குரிய என். எம். சவரிமுத்து அடிகள், பண்டிதர் ச. இராமச்சந்திரன், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எஸ். தனபாலசிங்கம் உட்பட பலர் சொற்பொழிவாற்றினார்கள். (கா. நி.)

## சேவை . . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிலம், விஞ்ஞானம் ஆகியவற்றை நன்றாகப் பயின்று கல்வித்துறையில் சிறப்புற விளங்கினார். பொதுவேலைப் பகுதிப் பொறியியலாளராகக் கடமையாற்றிய இவரை அரசாங்கம் நீர்ப்பாசனம் பற்றியாராய்வதற்காகச் சிறந்த பொறியியலாளர்களில் ஒருவராக நியமித்தது. 1934-ம் ஆண்டு நாகரத்தினம்மா என்ற பெண்ணைக் கைப்பிடித்து நல்லில்லறம் நடத்த ஆரம்பித்தார்.

1947-ம் ஆண்டு தனதரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்றுத் தந்தையின் தொழிலை கவனித்து அந்த வருவாயில் பல அறச்செயல்களை செய்தார். இவரின் தொண்டின் சிறப்பால் 1962-ம் ஆண்டு 'சமாதான நீதவான்' பட்டம்இவருக்குக்கிடைத்தது. இதன் பின்னர் 1955-ம் ஆண்டு இவருக்கு 'முதலியார்' என்னும் கௌரவப்பட்டம் அரசினரால் வழங்கப்பட்டது. இவர் முதலியார் பட்டம் பெற்றபின்னர் மூளாய் கூட்டுறவு இயக்க நிலையத்தின் தலைவராகப் பதினாறு ஆண்டுகள் சிறந்த சேவை செய்தார் இவரின் சேவை இவ்வளவோடுமட்டும் நிற்கவில்லை 1954-ம்ஆண்டில் வலிகாமம் மேற்கு சைக்கிள் கூட்டு நிறுவனம், ரோட்டரி இயக்கம் வடஇலங்கை அரிசி ஆலைச் சங்கம், நவாலி சைக்கிள் போக்குவரவாளர் சங்கம் ஆகிய சங்கங்களின் தலைவராகவும் சேவை செய்தார். 1960-ம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றபொது தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் வட்டுக்கோட்டை வேட்பாளராகப் போட்டியிட்டார். 'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு' என்ற வள்ளுவர் வாக்கு உலகின் பெருமையைத் தராசிட்டு நிலைநிறுத்திக் கூறிய உரையாகும். அந்த உரை முதலியார் வாழ்க்கையோடு இணைந்து உறுதிபெற்றுவிட்டது. முதல்நாள் இருந்த முதலியார் அவர்கள் மறுநாள் சிவனடி சேர்ந்த செம்மலாகி விட்டார்கள்.

ஓர் அன்பர்

உடுவில், புதன்

நீர்வேலி, வேலணை, நாரந்தனை, காரைதீவு, எழுவைதீவு, மல்லாகம், கரைச்சி, அனலைதீவு, ஏழாலை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் புதிய தேர்தல்கள் இவ்வருடம் ஜூன் மாதத்திற்குள் நடைபெறவிருக்கின்றன.

## சர்வோதய

(1-ம் பக்கத் தொடர்சி)

திரு. டி. பி. எல்பொலவும் முதலியார் செ. சின்னத்தம்பியும் தொடர்ந்து பெண்களும் சர்வோதய பாத்திரத்தைப்பெற்றார்கள்

### திடீரென எழுந்தார் ஜே. ஆர்.

மேற்படி பகிரங்கக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தனவு திடீரென எழுந்து சென்று சர்வோதய பாத்திரத்தை திருமதி ஜெயப்பிரகாஷ் நாராயணிடம் இரண்டு கைகளையும் நீட்டிப்பெற்றுக்கொண்டார் சபையோர் கைதட்டி பேராரவாரம் செய்தனர். தொடர்ந்து பலர் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு வந்து சர்வோதய பாத்திரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

## கோப்ப ய் கி. ச. புதிய தலைவர்

கோப்பாய், புதன்

15 அங்கத்தவர்களைக் கொண்ட கோப்பாய் கிராம சபையின் புதிய தலைவராக 12-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். பரமானந்தராஜா இன்று தெரிவு செய்யப்பட்டார்.

இவரது பெயரை திரு. பொ. தி. சம்பந்தர் பிரேரித்தார். திரு. ந. தருமலிங்கம் அனுவதித்தார்.

இவருடன் போட்டியிட்ட முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஏ. காசிப்பிள்ளையை விட திரு. பரமானந்தராஜா 3 மேலதிக வாக்குகள் பெற்றுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. பரமானந்தராஜாவுக்கு 9 வாக்குகளும் திரு. காசிப்பிள்ளைக்கு 6 வாக்குகளும் கிடைத்தன.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஜோசப் இதனை நடத்தி வைத்தார்.

உபதலைவராக 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. தர்மலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

(அள. -கோ. நி.)

## மண்டைதீவு கி. ச. தலைவர்

அல்லைப்பிட்டி, புதன்

புதிதாக அமைக்கப்பட்ட மண்டைதீவு கிராமசபைத் தலைவராக திரு. கே. கைலாசபிள்ளை தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக திரு. கே. நடராஜா தெரிவுசெய்யப்பட்டார் தலைவராக 6.ம் வட்டார அங்கத்தவரான திரு. கைலாசபிள்ளையின் பெயர் மட்டுமே பிரேரிக்கப்பட்டது.

8 வட்டாரங்களைக் கொண்ட மண்டைதீவு புதிய கிராமசபையின் தலைவர் தெரிவு இன்று மண்டைதீவு கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்றபோது 4-ம், 5-ம் வட்டார அங்கத்தவர்கள் வாக்களிக்கவில்லை எனத் தெரிகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

அணிவகுப்பில் 39 பேர் கலந்துகொண்டனர். திரு. சூரியசேகரன் உடனே அடையாளம் காட்டினார்.

வல்வெட்டித்துறை இராணுவத் தாக்குதல்கள் சம்பந்தமான விசாரணைகள் அண்மையில் கொழும்பிலிருந்து வந்த இரண்டு விசேஷ அதிகாரிகளால் நடாத்தப்பட்டது தெரிந்ததே.

(நல். வல்வை. நிரு.)

### சடலத்தை மீட்பதில் விமானங்கள்

நியூயோர்க், ஜன. 15

உலகின் மிகப்பெரிய விமானந்தாங்கியான அமெரிக்க சண்டைக்கப்பல் என்டர் 'பிரைஸ்' பசுபிக் சமுத்திரத்தில் திடீரென தீப்பற்றி எரிந்ததால் மாண்ட 25 பேரின் சடலங்களை மீட்பதில் விமானங்களும் கப்பல்களும் ஈடுபட்டுள்ளன.

இச்சம்பவம் நடைபெற்ற [illegible] இருநூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

(விபரம் 3-ம் பக்கம்)


### தேவை

மனேஜர் 1, கசியர்—1

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ளவராயும் பிணை கட்டக்கூடியவராயும் நேர்மையுள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

கு. வி. தம்பித்துரை ஜே.பி.
கலைவாணி அச்சகம்,
10, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.



### மரண அறிவித்தல்

நாகம்மா

காலஞ்சென்ற சங்கீத வித்துவான் ச. பரமேஸ்வரஐயர் அவர்களின் பாரியார் நாகம்மாஅவர்கள் 14-1-69 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்கள். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்று சாயந்தரம் நடைபெற்றன. உறவினர்களும் நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 492



காசி ஆனந்தன் எழுதிய

## தமிழன் கனவு நூலின் ஆய்வுரை விழா

காலம்: இன்று (16-1-69 வியாழக்கிழமை) பி. ப. 5-00
இடம்: யாழ்ப்பாணம் மலாயன்கபே மேல்மாடி.
தலைவர்: திரு. வி. கந்தவனம் பி. ஏ.

ஆய்வுரை நிகழ்த்துவோர்

திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி. திரு. கனகசெந்திநாதன்
திரு. க. சச்சிதானந்தன்பி.ஏ. திரு. இ. அம்பிகைபாகன் (அம்பி)
நன்றியுரை: திரு. யாழ்வாணன்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
யாழ். இலக்கியவட்டம்.

தமிழன் கனவு கவிதை நூல் பிரதியொன்று ரூபா 2-00



### மரண அறிவித்தல்

திியோகுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

திியோகுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் ராஜநாயகம்(தொழிற்கந்தோர்) ராஜரத்தினம் (இலங்கை றோயல் விமானப்படை, கட்டுநாயகா) ஞானப்பிரகாசம் (சென்பற்றிக்ஸ்கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அருமைத் தந்தையாவார். அன்னாரது பூதவுடல் இன்று மாலை 5 மணிக்கு டெம்பிள் வீதியிலுள்ள 39-ம் இலக்க இல்லத்திலிருந்து சென் மேரீஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும் 776


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org